Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.7 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. செந்தில் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of March 2026.

(Accused present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் சுள்ளிபாளையம் கெடாபரப்பு காட்டில் குடியிருந்து சொந்தமாக அட்டை மில் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் 1,2 எதிரிகளை எனக்கு தெரியும். இறந்துபோன மனோஜ் மற்றும் அவரது மனைவி பிரியாவை எனக்கு தெரியும். நான் இறந்து போன மனோஜின் மூத்த அக்கா சுதாவின் கணவர். சம்பவம் பற்றி எனக்கு நேரில் தெரியாது. 16.09.2024ம் தேதி இரவு 9.30 மணியளவில் நான் எங்கள் ஊரில் இருந்தபோது என் மாமியார் மணிமேகலை எனக்கு போன் செய்து மனோஜ் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நாமக்கல் Gh–ல் இருப்பதாக சொன்னார்கள். நான் உடனே நாமக்கல் Gh–க்கு போய் மனோஜ் இறந்துகிடந்ததை பார்த்தேன். என் மாமியார் என்னிடம் அன்று மனோஜிற்கும், அவரது மனைவி பிரியாவிற்கும் பிரச்சனை என்றும், பிரியா கோவித்து கொண்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு போவதாக சொல்லி வீட்டை விட்டு வெளியே போனதாகவும், அங்கிருந்தவர்கள் அவரை சமாதானப்படுத்தி கொண்டிருந்ததாகவும், அப்போது பிரியாவின் அண்ணனும், அவரது உறவினர்களும் வந்து மனோஜை அடித்து உதைத்தாகவும், அதனால் மனோஜ் கீழே விழுந்த மயக்கமாகி பின்பு இறந்துவிட்டதாகவும் சொன்னார்கள். மறுநாள் 17.09.2024ம் தேதி 11 மணிக்கு

நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தார். நானும், என்னுடைய சகலையும் ஊர்காரர்களும் பிரேத விசாரணையில் கலந்து கொண்டோம். பிறகு, 2 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

சம்பவத்திற்கு மறுநாள் காலை நான் 10 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு போனேன். அதன்பிறகு, இன்ஸ்பெக்டர் அங்கு வந்தார். பிரேத விசாரணை செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பிரேத விசாரணை அறிக்கையில் நான் பஞ்சாயத்தாராக கையெழுத்து செய்யவில்லை என்றும், பிரேத விசாரணை சமயத்தில் நான் அரசு மருத்துவமனையிலேயே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. மனோஜின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பிய பிறகு, போலீசார் இவ்வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்த போது என்னுடன் ராஜா, ராமலிங்கம், சக்திவேல், நடராஜன், செந்தில்குமார், அய்யம்பெருமாள், மணிமேகலை, விக்னேஷ்வரன் ஆகியோரையும் விசாரித்தார்கள். எங்களிடம் சுமார் போலீசார் 1 மணி நேரம் விசாரித்தார். சடலக்கூராய்வு செய்த பிறகுதான் எங்களை விசாரித்தார்கள். எங்கள் ஊரிலிருந்து கபிலர்மலை 18கி.மீ தூரத்தில் உள்ளது. நாமக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து கபிலர்மலை 40 கி.மீ தூரம் இருக்கும். நான் போலீசாரிடம் சொல்ல சொல்ல லேப்டாப்-ல் பதிவு செய்தார்கள். லேப்டாப்-ல் பதிவு செய்த ஆய்வாளர் மருத்துவமனையில் எத்தனை மணிவரை இருந்தார் என்று நியாபகம் இல்லை. சாயங்காலம் வரை இருந்தார்.

என் மாமியார் என்னிடம் சொன்னது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், இறந்த மனோஜ் என்து மைத்துனர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.